# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள் 06.08.2026</u>

## <u>முன்னிலை</u>

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

### மாநில தகவல் ஆணையர்

*****

### <u>வழக்கு எண். SA 12210/SCIC/2025</u>

Thiru S. MUTHUKUMAR, - மேல்முறையீட்டாளர்
S/O. Thiru. Sampath
No.6/2881, NETHAJI ROAD
HOSUR - 635 109. Krishnagiri District
Phone: 81242 17961.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ - பொது அதிகார அமைப்பு
சார் பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
தேன்கனிக்கோட்டை
கிருஷ்ணகிரி மாவட்டம் - 635 107.

## <u>ஆணை</u>

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **17.05.2025** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 18.06.2025 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 21.06.2025 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 09.08.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 17/05/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர் அலுவலகம், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி, அதில் “Document No.1446/2020 - regarding - Who prepared this document and document writer name and his Licence Number details.” என்பன போன்று 12 (பன்னிரெண்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திரு.S.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகவில்லை.

தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.K.நடராஜன், சார்பதிவாளர், தேன்கனிக்கோட்டை சார்பதிவகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு ஏற்கனவே 18/06/2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக பதில்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலிக்கையில், மனுதாரர், தனது தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005, பிரிவு 19(1)-ன் கீழான 21/06/2025 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை சார்பதிவாளர், தேன்கனிக்கோட்டை சார்பதிவகத்திற்கு முகவரியிட்டுள்ளார். ஆனால் மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம் அவர்கள்தான் மேல்முறையீட்டு அலுவலர் ஆகும். மனுதாரர், தவறாக சார்பதிவாளர் அவர்களுக்கே முதல் மேல்முறையீட்டு மனுவினை அனுப்பியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், தேன்கனிக்கோட்டை சார்பதிவகம் அவர்கள் மேற்சொன்ன மேல்முறையீட்டு மனுவை, உரிய மேல்முறையீட்டு அலுவலருக்கு மேலனுப்பியோ, மாற்றமோ செய்திருக்க வேண்டியது, அலுவலரின் கடமைகளில் ஒன்றாகும். இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர், தான் ஆவண எண்.1446/2020-ன் சான்றொப்பமிட்ட நகலைக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், தேன்கனிக்கோட்டை சார்பதிவகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் மேற்சொன்ன ஆவண எண்.1446/2020-ன் சான்றொப்பமிட்ட நகலை மனுதாரருக்கு உடனடியாக விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர் மேற்சொன்ன தகவலை மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான சான்றினை ஆணையத்திற்கு 15/09/2026-க்குள் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்குறிப்பிட்ட உத்தரவுகளுடன், இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12210/SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
தேன்கனிக்கோட்டை
கிருஷ்ணகிரி மாவட்டம் - 635 107.

**மேல்முறையீட்டாளர்**

Thiru S. MUTHUKUMAR,
S/O. Thiru. Sampath
No.6/2881, NETHAJI ROAD
HOSUR - 635 109. Krishnagiri District
Phone: 81242 17961.

RG/Sr.PC